செய்தி வெளியீடு எண்.710 நாள்.13.10.2009

**சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலைய வளாகத்தில் கட்டப்பட்டுள்ள குளிரூட்டப்பட்டுள்ள புதிய ஓய்வறை கட்டிட திறப்பு விழா மற்றும் நவீன தானியங்கி பேருந்து சுத்தம் செய்யும் கருவி துவக்க விழா 14.10.2009 அன்று மாலை 5.00 மணியளவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.**

சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலைய வளாகத்தில், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, குளிரூட்டப்பட்டுள்ள புதிய ஓய்வறை கட்டிட திறப்பு விழா மற்றும் நவீன தானியங்கி பேருந்து சுத்தம் செய்யும் கருவி துவக்க விழா 14.10.2009 (புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இவ்விழாவில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.கே.எஸ்.இளங்கோவன் அவர்கள் முன்னிலையில், குளிரூட்டப்பட்டுள்ள புதிய ஓய்வறை கட்டிடத்தை திறந்து வைத்தும், நவீன தானியங்கி பேருந்து சுத்தம் கருவியை துவக்கி வைத்தும் விழா பேருரையாற்றுவார்கள்.

போக்குவரத்துத் துறை அரசு செயலர் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தலைவர் திரு.அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. வரவேற்புரையாற்றுவார்கள்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செ.குப்புசாமி தலைமையுரையாற்றுவார்கள்.

வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.கே.எஸ்.இளங்கோவன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ப.ரங்கநாதன், சென்னை மாநகராட்சி 5வது மண்டல குழு தலைவர் திரு.எஸ்.சுரேஷ்பாபு, சென்னை மாநகராட்சி 65வது வார்டு உறுப்பினர் திரு.சு.இளங்கோவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு.க.சட்டநாதன் மோகன்ராஜ் நன்றியுரையாற்றுவார்கள்.

இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள். பொதுமக்கள் அனைவரும் வருகை தந்து விழாவினை சிறப்பிக்குமாறு போக்குவரத்துத் துறை அரசு செயலர் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தலைவர் திரு.அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு.க.சட்டநாதன் மோகன்ராஜ் ஆகியோர் அன்புடன் அழைக்கிறார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9